வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 10.04.2025 வியாழக்கிழமை இதழ் : 101 பக்கங்கள் : 12




# ஜனாதிபதி தலைமையில் இன்று சர்வகட்சி மாநாடு!

## அமெ. வரி விதிப்பு குறித்து ஆராய்வதற்கு

கொழும்பு, ஏப். 10

**இலங்கை மீதான அமெரிக்காவின் வரி விதிப்பு குறித்து ஆராய்வதற்காக இன்று வியாழக்கிழமை ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது.**

**எதிர்க்கட்சிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளன.**

அமெரிக்கா விதித்துள்ள புதிய வரித் திருத்தத்தினால் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய வழிமுறைகள் மற்றும் அரசாங்கம் என்ற அடிப்படையில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து கலந்துரையாடப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தக் கூட்டம் இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தனது எக்ஸ் கணக்கில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்பு இலங்கையிலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாய நிலைகள் உருவாகியுள்ளன.

கடந்த 2ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அறிவிப்பின் பிரகாரம் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு 44 வீத வரி விதிக்கப்பட்டது.

இந்த வரி விதிப்பு இலங்கையின் ஆடை உற்பத்தித்துறை உட்பட பல்வேறு

11

# அமெ. வரியை ஒரே நாளில் நீக்க செய்திருப்பார் ரணில்

### கூறுகிறார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, ஏப். 10

ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஜனாதிபதியாக இருந்திருந்தால், இலங்கை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட 44 வீத வரியை ஒரே ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் நீக்க வாய்ப்பு கிடைத்திருக்கும் என்று முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

பில்லியனர் தொழிலதிபர் எலோன் மஸ்க்கின்

11

# அமெரிக்க வரி குறித்து அரசுக்கு அறிவு இல்லை!

### ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 10

அமெரிக்கா விதித்துள்ள இறக்குமதி வரிக்கு மாற்றீடு என்னவென்பது குறித்து போதிய அறிவு அரசாங்கத்திடம் கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

11

# தேசிய ஊழல் எதிர்ப்பு திட்டம் அநுர தலைமையில் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 10

2025 - 2029 தேசிய ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டம் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ, சட்ட மாஅதிபர் பாரிந்த ரணசிங்க, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமும் மேல் நீதிமன்ற நீதிபதியுமான ரங்க திசாநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதனிடையே, தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்திற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உள்விவகார பிரிவு நேற்று

11

# நிபந்தனைகளைப் பின்பற்றாவிடின் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை கிடையாது!

## இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 10

ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கைக்கு வேண்டுமானால் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை இலங்கை பின்பற்றியாக வேண்டும். இணக்கப்பாடுகளை நிறைவேற்றியாக வேண்டும். இல்லாவிடின், ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கைக்கு கிடைக்காமல் போய்விடும் என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரினோ தெரிவித்தார்.

மேலும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கையே ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்கிறது. எனவே, அந்த சலுகையை கேட்டால் அதற்கேற்றவாறு இலங்கை நடந்து கொள்ள வேண்டும். எங்களது நிபந்தனை களை தளர்த்துமாறு இலங்கை எமக்கு கூற முடியாது. அதே போன்று ஐரோப்பிய ஒன் றியம் இலங்கைக்கு வழங்கியிருக்கின்ற சலுகையை இலங்கை முழுமையாக பயன்படுத் திக்கொள்ளவில்லை. அதனை முழுமையாக பயன்படுத்தினால் ஐரோப்பிய ஒன்றியத் துக்கான ஏற்றுமதியை இரண்டு மடங்காக அதி கரிக்க முடியும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் சுட்டிக்

11



# பயங்கரவாதத் தடைச் சட்டம் உறுதியளித்தபடி நீக்கப்படும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஏப். 10

தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தபடி பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்றும் அதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகளை விரைவுபடுத்த அறிவுறுத்தியுள்ளதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று கூடியபோது பிரதமரிடம் கேள்வி எழுப்பும் நேரத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்

11

# மாகாண சபை தேர்தல் முடிந்ததும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

கொழும்பு, ஏப். 10

இலங்கைக்கான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறையைத் தொடங்குவதற்கு முன், தற்போதைய அரசாங்கம் இரண்டு முன்னுரிமை விடயங்களைக் கருத்திற் கொண்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதிலும், தாமதமான தேர்தல்களை

11

# சிறுவர் மத்தியில் தொடர்ந்து அதிகரிக்கும் மந்தபோசனை

### உலக உணவுத் திட்டம் தகவல்

கொழும்பு, ஏப். 10

இலங்கையில் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் வயதுக்கு ஏற்ற எடை மற்றும் உயரம் இன்மையினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த 5 வருடங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. இது கரிசனைக்குரிய அளவில்

11

# வடக்கு-கிழக்கில் சீனா எதுவும் செய்யமுடியாது!

## செல்வம் அடைக்கலநாதன் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 10

சீனாவின் அனுசரணையில், சீனாவின் அடிவருடிகள் இந்தியாவுடன் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களை குழப்ப நினைத்தால் நிச்சயமாக அதனை எதிர்த்து நிற்போம். அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்கில் சீனாவின் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு அனுமதிக்க முடியாது என்பதையும் கூறிக் கொள்கின்றேன் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற சேர் பெறுமதி (திருத்தச்) சட்ட மூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான

11

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் வரிகள் குறித்து கலந்துரையாடவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழு ம்பு, ஏப். 10

ஜனாதிபதி ட்ரம்பின் வரிகள் தொடர்பில் கலந்துரையாட உடனடியாக செனட் சபை மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களைச் சந்திக்கவும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் நேற்று கேள்வி எழுப்பியபோதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கனடா, மெக்சிக்கோ மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு பெப்ரவரி முதலாம் திகதி முதல் தீர்வை வரி விதிப்பை அமெரிக்கா ஜனாதிபதி அறிவித்தார். இந்த வரி விகித மாற்றங்களால் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து நான் இந்த பாராளுமன்றத்தில் 19.02.2025 ஆம் திகதி அன்று கேள்வி எழுப்பினேன்.

எவ்வாறாயினும், இந்த விடயத்தில் அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே செயலற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்தது. அண்மையில் இலங்கை ஏற்றுமதிகளுக்கு 44 வீதம் பரஸ்பர வரி விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் தமது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது. இதன் பிரகாரம், நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன். குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் இலங்கை-அமெரிக்கா நட்புறவுச் சங்கம் அமைந்து காணப்படுகின்றதா? இந்த செனட் சபை பிரதிநிதிகளுக்கும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களுக்கும் காணப்படும் தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த வரிகளைக் குறைப்பது தொடர்பாக சில முன்னேற்றங்களைச் செய்யலாம்.

தற்போது, குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் இணைந்து செனட் சபை ஊடாக இந்த வரிகள் தொடர்பாக சட்டமொன்றைக் கொண்டு வர தயாராகி வருவதனால், இந்த உறுப்பினர்களோடு அவசர கலந்துரையாடல்களை மேற்கொள்ள கோரிக்கை விடுக்கிறேன்.

ஆம் என்றால், பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகிப்போர்களினது எண்ணிக்கை யாது? அந்த உறுப்பினர்களின் பெயர்கள் யாது? அவர்கள் எந்த மாநிலங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்?

இந்த நட்புறவுச் சங்கங்களின் உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு நமது நாட்டின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள 44 வீத வரிவிதிப்பு பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

2025.03.15 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி, தற்போது நியமிக்கப்பட்டுள்ள தூதுக்குழு பிரதிநிதிகள் இந்த விவகாரத்தில் நாட்டின் சார்பில் என்ன முன்னேற்றங்களுக்கு வந்துள்ளனர்?

இந்தக் குழுவினர் அமெரிக்காவிற்குச் சென்று, இப்பிரச்னைக்கு தீர்வு காண என்ன பேச்சுவார்த்தை களை நடத்தியுள்ளனர்? எந்தெந்த நிறுவனங்களோடும், எந்தெந்த நபர்களோடும், எந்தெந்த குழுக்களுடனும் இந்த கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்? இதன் முன்னேற்றம் யாது?

இந்த வரிப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதற்கு அரசாங்கத்திடம் காணப்படும் திட்டம் என்ன? இது தொடர்பான விடயங்களை இந்த பாராளுமன்றத்தில் முன்வைப்பீர்களா?

இந்தப் பிரச்னைக்கு குறுகிய, மத்திய கால மற்றும் நீண்ட கால தீர்வாக ஏற்றுமதி ஸ்தானங்களைப் பல்வகைப்படுத்த அரசாங்கம் நடைமுறை ரீதியாக என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளன ?

எந்த வகையிலேனும் இந்த வரிகளால் நாட்டின் ஏற்றுமதிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பாதிப்புகள் ஏற்படுமாயின் 2028 IMF வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் இணக்கப்பாட்டை மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பீர்களா?

இந்த வரிகளால் 2028 இல் கடனை திருப்பிச் செலுத்தும் நடவடிக்கைகளில் சிக்கல்களை ஏற்படுத்தும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான புதிய தூதுக்குழுவின் தலைவரை நேற்று சந்தித்தபோது தெரிவித்தேன். எனவே அரசாங்கம் உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தை சந்தித்து, ஏதேனும் தீர்வை எட்டிக் கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்



வவுனியா, ஏப்.10

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வவுனியா ஊடகவியலாளர்களும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ. ஏ. சரத் சந்திர தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறை, பெண் பிரதிநிதித்துவம் தெரிவு செய்யும் முறை, பட்டியல் ஆசனம் வழங்கப்படும் முறை மற்றும் தேர்தல் முன்னாயத்த செயல்பாடுகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டதுடன், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் இதன் போது பதில் வழங்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சி. அமல்ராஜ் மற்றும் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். அரவிந்தன், தேர்தல்கள் அலுவலக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# சர்வகட்சி மாநாட்டில் ஜீவன்!

கொழும்பு, ஏப். 10

ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள சர்வ கட்சி மாநாட்டில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஐ.தே.க பாராளுமன்றக்குழு தலைவரும், இ.தொ.கா பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான் பங்கேற்கவுள்ளார்.

இலங்கை மீதான அமெரிக்காவின் வரிவிதிப்பு தொடர்பில் ஆராய்வதற்காக சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டுமாறு எதிரணிகள் சார்பில் ஜனாதிபதிக்கு அனுப்பட்ட கடிதத்தில் ஜீவன் தொண்டமானும் கையொப்பமிட்டிருந்தார்.

இக்கோரிக்கையின் பிரகாரமே சர்வகட்சி கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வரிவிதிப்பால் தேயிலை, இறப்பர், இலவங்கப்பட்டை, ஆடை உற்பத்தி போன்ற துறைகளில் தாக்கம் ஏற்படக்கூடும் எனவும், இதனால் பெருந்தோட்ட பகுதி மக்களுக்கும் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள் ஏற்படக் கூடும் எனவும் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, குறித்த வரி விதிப்பில் இருந்து மீள்வதற்குரிய வழிமுறைகள் என்ன, அத்துடன், மாற்றுவழிகள் எவை, அமெரிக்காவுடன் இராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நாளை ஆராயப்படும் போது, பெருந்தோட்டத்துறை சார் விடயங்கள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்படும் எனவும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார். (அ)

# நேர்மையான தேசத்தை நோக்கி செயல்பாட்டுத் திட்டம் ஆரம்பம்

## யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் இணைவு

யாழ்ப்பாணம், ஏப். 10

"நேர்மையான தேசத்தை நோக்கி" ஊழலிற்கு எதிரான தேசிய செயல்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து கொண்டனர்.

ஊழலிற்கு எதிரான தேசிய செயல்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் நேற்றைய தினம் காலை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் காணொலி மூலம் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஒன்று கூடி இணைந்து கொண்டனர்.

ஊழலிற்கு எதிரான தேசிய செயல்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஜனாதிபதியால் ஆற்றப்பட்ட உரை காணொலி மூலம் காண்பிக்கப்பட்டது.

ஊழல் எதிர்ப்பு விழிப்பூட்டல் காணொலியும், ஊழலுக்கு எதிரான தேசிய செயல்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதன் முக்கிய பிரிவுகளை சுருக்கமாக விவரிக்கும் காணொலியும் காட்சிப்படுத்தப்பட்டதுடன், ஊழலுக்கு எதிரான தேசிய செயல்பாட்டுத் திட்டத்தை (2025 - 2029) உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நேரடியாக சகல மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் பங்கு பற்றினர். (எ)

# பெண் பாலியல் வன்புணர்வு; உள்ளூராட்சி வேட்பாளர் கைது!

கொழும்பு, ஏப். 10

பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் உள்ளூராட்சி சபை தேர்தல் வேட்பாளர் ஒருவரை அம்பாந்தோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் அம்பாந்தோட்டை - சிறிபோபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சுற்றுலாத்துறை சார்ந்தோர் பதிவு செய்யப்படவேண்டும்

கொழும்பு, ஏப். 10

சுற்றுலாத்துறையை மேம்படுத்தத்தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு வருவதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் சமிந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைகளத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறை வளர்ச்சி இன்றியமையாததாகும். சுற்றுலாத்துறை எதிர் நோக்கும் பிரச்சினைகளை அமைச்சின் ஊடாக முடிவுறுத்த முடிந்துள்ளது. மாகாண சுற்றுலாத்துறைசார் அலுவலகங்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு சுற்றுலாத் துறையை மேம்படுத்த சில திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

சுற்றுலா சார் தொழில் துறைசார்ந்தவர்கள் பதிவு செய்ய வேண்டியது அவசியமான விடயமாகும்.

வெளிநாட்டவர்களும் சுற்றுலாத்துறை சார் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. சிலர் சட்ட பூர்வமாகவும் மேலும் சிலர் தேசிய தொழிலாளர்களுடன் இணைந்து மேற்கொள்கின்றனர். இந்த விடயத்தை முறையாக ஒழுங்குபடுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

சட்டத்திற்கு புறம்பான ரீதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் நாட்டை விட்டு திருப்பி அனுப்பப்படுவர். அதே போன்று சுற்றுலாத்துறையை மேம்படுத்தத்தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

யால, சிகிரியா உள்ளிட்ட சுற்றுலாத்தளங்களுக்கு அதிகளவிலான சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர். ஆகவே அதனை முறையாக பேண தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.04.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அமெரிக்க வரி விவகாரம்

ரணில் இருந்திருந்தால் அமெரிக்க வரி விவகாரத்தை ஒரு தொலைபேசி அழைப்பில் முடித்து வைத்திருப்பார் என்று, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கின்றார். எலான் மஸ்க்கின் நெருங்கிய நண்பர்களில் ரணிலும் ஒருவர். அதனை பயன்படுத்தி இந்த விடயத்தை ரணில் கையாண்டிருப்பார் என்று அவர் தெரிவித்திருக்கின்றார். எலான் மஸ்க் ரணிலை அறிந்திருப்பாரா என்னும் விடயத்தை ஆராய்வதை விடுவோம். ஆனால், அமெரிக்க வரிவிதிப்பில் தனிநபர் கெட்டித்தனத்திற்கு இடமிருக்க முடியுமா?

அமெரிக்காவின் வரிவிதிப்பு விவகாரம் ஓர் உலகளாவிய அமெரிக்க நடவடிக்கை. டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து பல அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றார். இதில் வரிவிதிப்பு பிரதானமானது. இந்த வரிவிதிப்பின் பிரதான இலக்கு சீனாவாகும். சீனா தற்போது பதில் வரிவிதிப்பு என்னுமடிப்படையில் அமெரிக்கா மீதான வரிவிதிப்பை அறிவித்திருக்கின்றது.


ட்ரம்ப் நிர்வாகத்தின் வரி விதிப்பு அறிவிப்பை தொடர்ந்து ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகள் வரிவிதிப்பில் தங்களுக்கு சலுகைகளை தருமாறு அமெரிக்க அதிபரிடம் கோரியிருக்கின்றன. அமெரிக்கா எதிர்பார்க்கும் விடயமும் இதுதான். அமெரிக்காவை தவிர்த்து, உங்களால் முடிந்தால் பயணம் செய்யுங்கள் என்பதே அமெரிக்காவின் மறைமுகமான எச்சரிக்கையாகும். இந்தப் பின்புலத்தில் இலங்கையும் இந்த வரிவிதிப்பால் பெரியளவில் பாதிப்படையக் கூடிய நாடுகளில் ஒன்றாகும்.

இறக்குமதி செய்யப்படும் அமெரிக்க பொருட்களுக்கான வரிவிதிப்பை நாங்கள் குறைக்கின்றோம் - அதேபோன்று, உங்களின் வரிவிதிப்பில் சலுகைகளை தாருங்கள் என்னும் கோரிக்கையை அநுரகுமார அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது. இதனை அமெரிக்க நிர்வாகம் எந்தளவிற்கு கருத்தில்கொள்ளும் என்பது பொருத்திருந்தே நோக்க வேண்டியது.

இது ஓர் உலகளாவிய அணுகுமுறை என்பதால் இதில் ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு வாய்ப்பு வழங்கினால் அதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய சிறிய நாடுகளும் அதே கோரிக்கையை முன்வைக்கும். எனவே அமெரிக்கா நிர்வாகம் இதனை எவ்வாறு கையாளும் என்பது சிக்கலானதுதான்.

பொதுவாக ரணில் விக்கிரமசிங்க ஒரு மேற்கு சார்பானவர் - எனவே, அவரால் சில விடயங்களை சாத்தியப்படுத்த முடியும் என்னும் நம்பிக்கை சிலரிடமுண்டு. ரணில் மேற்கு சார்பானவர் என்பது ஒரு பழைய பார்வைதான். ஆனால், அது இப்போதும் எந்தளவிற்கு சரியாக இருக்கும் என்பதும் ஆராயப்பட வேண்டியது. ஆனால் பிரச்னையோ வேறு - உண்மையில் இவ்வாறான விடயங்களில் தனிநபர் கெட்டித்தனம் பயனற்றது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருந்திருந்தால் இந்த விடயத்தை அதிகம் இந்தியாவை சார்ந்து கையாளும் முடிவை எடுத்திருக்க வாய்ப்புண்டு.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க தற்போது எட்கா உடன்பாட்டை இறுதி செய்யுமாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகின்றார். தற்போது உலகளவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை கருத்தில் கொண்டுதான் அவர் இதனைக் கூறுகின்றார். ஆனால் ரணில் இருந்திருந்தால் அவர் அமெரிக்க வரிவிதிப்பை ஒரு தொலைபேசி அழைப்பில் முடித்து வைத்திருப்பார் என்பதெல்லாம் ரணில் பக்தியின் விளைவே தவிர, அது உண்மையல்ல.


படம் : ஐ.சிவசாந்தன்

## சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பர் திடீரென குடைசாய்ந்து விபத்து

### நல்லூரில் நேற்றுக்காலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பரை பொலிஸார் துரத்திச் சென்ற போது, டிப்பர் திடீரென குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை நல்லூரில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியை நோக்கி மணல் ஏற்றி வந்த டிப்பரை பொலிஸார் வழிமறித்த போது, பொலிஸாரின் உத்தரவை மீறி, டிப்பரின் சாரதி மிக வேகமாக வாகனத்தை செலுத்திச் சென்றுள்ளார்.

டிப்பரை நல்லூர் பின் வீதி வழியூடாக சென்று வீதி வளைவில் திரும்ப முற்பட்ட வேளை டிப்பர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீடொன்றின் மதிலை உடைத்து , வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் விபத்துக்குள்ளான டிப்பரின் சாரதியை பொலிஸார் கைது செய்த நிலையில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## அஞ்சல் வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு யாழில் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 10

உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை முன்னிட்டு அஞ்சல் வாக்குகள் அடையாளமிடும் தினத்தன்று அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவ லருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை நடை பெற்றது.

இதன்போது, தலைமையு ரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் கடமைகளைச் சிறப்பாக கடமையாற்றியதா கவும் அதற்கான நன்றியைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டு, இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர் தல்கள் கடமைகளிலும் எம்முடன் இணைந்து ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொண் டார்.


மேலும், அஞ்சல் மூல வாக்களிப்பு நிலைமைகளில் பருத்தித்துறை நகர சபைக்கான 463 வாக்குச்சீட்டுப் பொதிகள் மற்றும் வேலணை பிரதேச சபைக்கான 305 வாக்குச் சீட்டுப் பொதிகளும் தபாலில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட் டதுடன், ஏனைய உள்ளூர் அதிகார சபைக்கான வாக்குச் சீட்டுப் பொதிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்த லுக்கமைய எதிர்காலத்தில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரி வித்தார்.

மேலும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பொலிஸ், மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலு வலகத்தில் கடமையாற்றுபவர் களுக்கும் ஏப்ரல் 23,24ஆம் திகதிகளில் பிற அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கும் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கும் ஏப்ரல் 28,29ஆம் திகதிகளில் தவற விட்ட வாக்காளர்களுக்கான மீள அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளதாகவும் தெரி வித்துடன், தேர்தல் கடமைகளில் ஒருவரின் கவனயீனமான விடயங்களால் ஒருவரின் வாக்குரிமை பாதிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்து தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது, உள்ளூராட்சித் தேர்தலில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடும் தினத்தன்று அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான கடமைகள் தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.சசீலனால் விளக்க மளிக்கப்பட்டது.

இச் செயமலர்வில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடும் தினத்தன்று அத்தாட்சிப் படுத் தும் அலுவலர்களாக நியமிக் கப்பட்ட உதவித் தெரிவத் தாட்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 10 வியாழக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 27
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரையோதசி




**மேடம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். த்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் பனிப்போர் வந்து நீங்கும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**விருட்சிகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் வந்து போகும்.

**கும்பம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

# பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதானவர்களை விடுதலை செய்க

## சபையில் ரிஷாட் பதியுதீன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஏப். 10

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலம் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

"ஒரு முக்கியமான சட்டமூலத்தை கொண்டுவந்திருக்கிறீர்கள். அதற்கு நாங்களும் ஆதரவளிக்கின்றோம். இது நாட்டுக்குத் தேவையான சட்டமூலம். எனவே, அதற்காக நன்றி கூறுகின்றோம்.

ஆனால், ஒரு சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட விளைகின்றேன். இந்த அரசாங்கம் அதிகமான மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கம். சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம், மலையக மக்களுடைய ஆதரவையும் பெற்று ஆட்சிக்கு வந்த நீங்கள், பெரிய எதிர்பார்ப்புகளை மக்களுக்கு வழங்கி விட்டு வந்திருக்கிறீர்கள். எனவே, நீங்கள் கூறிய விடயங்களை நிறைவேற்றுகிறீர்களா? என்று மக்கள் உங்களை உண்ணிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

கடந்த காலங்களில் பிமல் ரத்நாயக்க போன்றவர்கள், இஸ்ரேல் நாட்டுக்கு எதிராக, பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர்கள். நட்புறவு சங்கத்தின் தலைவராகவும் பிமல் ரத்நாயக்கதான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

இருந்தபோதிலும், அண்மையில் ருஷ்தி என்ற நபரை கைது செய்தமை ஒரு பெரிய பேசுபொருளாக மாறியது. இஸ்ரேலுக்கு எதிராக ஒரு ஸ்டிக்கரை ஒட்டினார் என்பதற்காக அவர் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்டது தவறல்ல, அவரை உடனடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, நீதிவானுடைய உத்தரவின் பேரில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால், அந்த விடயம் தவறாகப் பேசப்பட்டிருக்கமாட்டாது. ஆனால், பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்தமையை, பொலிஸாரின் ஒரு கேவலமான செயலாகவே நான் பார்க்கிறேன். இது இந்த அரசாங்கத்துக்கு ஒரு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை, எதிர்காலத்தில் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். பொலிஸாரும் யாரைத் திருப்திப்படுத்துவதற்காக இதனைச் செய்தார்களோ தெரியவில்லை. எனவே, அவ்வாறான செயல்பாடுகளை நிறுத்த வேண்டும்"- என்றார்.

(எ)

# பருத்தித்துறை பிரதேச சபையிடம் கற்கோவளப் பாலம் ஒப்படைப்பு



யாழ்ப்பாணம், ஏப். 10

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட திட்ட முன்மொழிவுக்கு அமைவாக 2024 ஆம் ஆண்டு கடற்தொழில் அமைச்சின் 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையில் புனரமைக்கப்பட்ட கற்கோவளப் பாலம் (தீர்த்தக்கரைப் பாலம்) நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரி நாயக்க, மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) வேணன் பெரேரா, திட்ட பொறியியலாளர் லோகேஸ்வரன், பிரதேச செயலாளர் சத்தியசீலன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சுபச் செல்வன், வீதி அபிவிருத்தி மாகாண பணிப்பாளர் ஜெகநாதன், பிரதிப் பணிப்பாளர் முரளிதரன், அமைச்சின் பொறியியல் பிரிவு பணிப்பாளர் பண்டார, மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-02)

# யாழில் மேலும் வீதி சமிக்கைகள் தேவை



யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். மாவட்டத்தில் தற்போது 6 வீதி சமிக்கைகளே உள்ளன என்று சுட்டிக்காட்டிய பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலும் வீதி சமிக்கைகள் தேவை என்று கூறினார்.

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக செயலமர்வு பதில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் தலைவர் அரோஷா வித்திய பூஷணவும் பணிப்பாளர் ரி. ஜி. லக்ஷ்மனும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தலைமையுரை [illegible] பதில் அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டத்தில் 06 வீதி சமிக்கைகளே உள்ளன. இங்கு மேலும் தேவைப்பாடுகள் உள்ளன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ் விடயம் கலந்துரையாடப்பட்டது என்று கூறினார்.

மேலும், இந்தச் செயலமர்வில் கலந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஏனையவர்களும் பயனடையக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார்.

இதில், மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அ. கிருபாகரன், வீதிப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா இலங்கைக்கு மட்டும் வரி விதித்தது போன்று காட்ட சதி

## எதிர்க்கட்சிகள் செய்கின்றன என்கிறது அரசாங்கம்

கொழும்பு, ஏப். 10

**அமெரிக்காவால் இலங்கைக்கு மாத்திரம் வரி விதிக்கப்படவில்லை. எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்னையை அவ்வாறு காண்பிக்க முயற்சிக்கின்றன. இதனை எதிர்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



மேலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள வரி அதிகரிப்பானது உலகின் பல நாடுகளிலும் பெரும் பிரச்னையாகியிருக்கிறது.

ஆனால், எமது நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்மீதுள்ள கோபத்தால் ட்ரம்ப் இவ்வாறு வரி விதித்துள்ளமை போன்று காண்பிக்க முயற்சிக்கின்றன. ஆனால், இது அவ்வாறானதல்ல.

எவ்வாறிருப்பினும், இந்தப் பிரச்னைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். அமெரிக்காவின் உயர் அதிகாரிகளுடன் இது தொடர்பில் இலங்கையின் உயர்மட்ட அதிகாரிகள் ஆரம்பகட்ட பேச்சுகளை ஆரம்பித்திருக்கின்றனர். அடுத்த கட்ட பேச்சும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு ஏற்றுமதி தொழில்துறையுடன் தொடர்புடையவர்களை அடிக்கடி சந்தித்து நிலவரம் தொடர்பில் மதிப்பாய்வு செய்து அறிக்கையைத் தயாரித்து வருகின்றனர் - என்றார். (ஐ)

# தேசிய மக்கள் சக்தியின் பணிமனைகள் திறப்பு!



வவுனியா, ஏப். 10

தேசிய மக்கள் சக்தியின் வட்டார தேர்தல் பணிமனைகள் வவுனியா மாவட்டத்தில் பல இடங்களிலும் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

எதிர்வரும் மே 6ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்காக, வவுனியா மாநகர சபைக்குட்பட்ட கடைத் தொகுதி வட்டாரம் -06 இல் தேசிய மக்கள் சக்தி சார்பாக முன்னாள் நகர சபை உறுப்பினர் நா. லக்ஷனா நேரடி வேட்பாளராக போட்டியிடுவதுடன், ரவிச்சந்திரன் பட்டியல் வேட்பாளராக போட்டியிடுகிறார். இவர்களின் வட்டார அலுவலகம் கற்குழியில் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை, வைரவபுளியங்குளம், பூந்தோட்டம் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தியின் பணிமனைகள் திறந்து வைக்கப்பட்டன.

(ஐ)

# நல்லை, தருமபுரம் ஆதீன முதல்வர்கள் நேற்று சந்திப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் தருமபுரம் ஆதீனம் நேற்று புதன்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சிறீல சிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அதில் கலந்து கொள்வதற்காக தருமபுரம் ஆதீனம்

சிறீல சிறீ 27ஆவது குருமகா சந்நிதானம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேற்று முன்தினம் வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னணியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, ஏப். 10

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக நிகழ்வு கிளிநொச்சி தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இதன்போது கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மாவை கந்தசுவாமிக்கு பெருந்தொகை பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தினர்!



யாழ்ப்பாணம், ஏப். 10

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான பூர்வாங்க கிரியைகள் எண்ணெய் காப்பு சாத்துகின்ற நிகழ்வுகள் ஆலயத்தில் நேற்று நடைபெற்றன.

50 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெறவுள்ள நிலையில் பூர்வாங்க கிரியைகளிலும் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வுகளில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

வரலாற்று சிறப்புமிக்க மாவை கந்தனின் கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'ஊரான்' இறுவெட்டு வெளியீடு!

யாழ்ப்பாணம், ஏப். 10

ஊரான் இறுவெட்டு வெளியீட்டு விழா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றது.

இளையதம்பி செல்வச்சந்திரனின் தயாரிப்பில் - பாடல் வரிகளில் உருவான இந்த இறுவெட்டுக்கு பசுபதி கருணாகன் இசை அமைத்துள்ளார்.

ஈழத்து பாடகி கில்மிசா, நிறோஜன், கோகுலன் மற்றும் கனடாவைச் சேர்ந்த மின்னல் செந்தில் குமார் ஆகியோர் பாடல்களை பாடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடந்த வெளியீட்டு நிகழ்வில் ஆசியுரையை, மாவை ஆதீன பேரவை ராஜசிறி இரத்தின சபாபதி குருக்கள் வழங்கினார். தொடர்ந்து, இறுவெட்டை, யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என். சண்முகலிங்கன் வெளியிட்டு வைத்தார்.

சமூக சேவையாளர் இ. பேரின்பநாயகம் தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வை, மதுர [illegible] திருந்தார்.

# ஆசிரியர் கலாசாலையில் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 10

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக சுகாதார நாளை சிறப்பிக்கும் ஒன்றுகூடல் நேற்று புதன்கிழமை காலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் த. பேரானந்தராஜா அதிதியாக கலந்து சிறப்பித்தார்

கிறிஸ்தவ நெறி ஆசிரியர் மாணவி சுதாகர் கமலினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி விமல்ராஜ் உஷாநந்தினி உடற்பருமனை பேணுவோம் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

மூத்த விரிவுரையாளர் சுரேந்திரன் சிவலோசனி அதிதி அறிமுக உரையை ஆற்றினார். அதிதியாக கலந்து கொண்ட மருத்துவ நிபுணர் த. பேரானந்தராஜா கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமையும் உலக சுகாதார நாள் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது இதன்போது அமெரிக்க சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை பேராசிரியர் தவம் தம்பிபிள்ளை அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்கள் செய்த தவறுகளுக்காக மக்கள் அதிக விலை கொடுக்கின்றனர்!

## ஐ. எம். எவ்வின் முன்னாள் செயல்திட்ட பிரதானி

கொழும்பு, ஏப். 10

**இலங்கையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தவறான கொள்கை தீர்மானங்கள் மற்றும் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தம் இன்மை என்பவற்றின் விளைவாலேயே ஏற்பட்ட நெருக்கடியை சீரமைப்பதற்கு துரதிர்ஷ்டவசமாக தற்போது மக்கள் அதிக விலையை செலுத்தி வருகின்றனர் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான முன்னாள் செயல்திட்ட பிரதானி பீற்றர் ப்ரூயர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன எழுதிய நூல் வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்றளவில் அத்தியாவசிய சேவை வழங்கலுக்கு நிதி அளிக்கக்கூடிய மட்டத்துக்கு அரசாங்கத்தின் இயலுமை விரிவடைந்திருப்பதற்கு வரி செலுத்துபவர்கள் அவர்களின் தோள்களில் அதிக சுமையைச் சுமப்பதே காரணமாகும்.

இதேபோன்று தற்போது எரிபொருள், மின் கட்டணங்கள் முழுவதுமாக பயனாளர்களாலேயே செலுத்தப்படுகிறது. இதன்மூலம் அரசுக்குச் சொந்தமான நிதியை சமூகப் பாதுகாப்பு செயல் திட்டங்கள் உள்ளடங்கலாக முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை தற்போதைய நலிவடைந்த நிலையிலிருந்து முழுமையாக மீட்சியடைவதற்கும் 2022ஆம் ஆண்டு முகங்கொடுக்க நேர்ந்ததைப் போன்ற - மிக மோசமான நெருக்கடியொன்று மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இந்தத் தியாகங்கள் இன்றியமையாதன.

நான் 2022ஆம் ஆண்டு அதிகாலை 4 மணிக்கு இலங்கையில் தரையிறங்கியபோது கார்கள், லொறிகள், கனரக வாகனங்கள் அனைத்தும் மிக நீண்ட வரிசைகளில் நிற்பதை பார்த்தேன். மக்கள் அனைவரும் உணவு மற்றும் மருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வரிசைகளில் காத்திருந்ததால் பகல் வேளைகளில் பொருளாதார செயல்பாடுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் எவையும் தென்படவில்லை. அவ்வேளையில் மின் துண்டிப்பும் நடைமுறையில் இருந்தது. மின்துண்டிப்பின் விளைவாக நாம் அவ்வப்போது இருண்ட அறைகளில் அமர்ந்திருந்தோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயல் திட்டம் அமுல்படுத்தப்பட்டு இரண்டு வருடங்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்க முக்கிய அடைவுகளை எட்டுவதற்கு ஏதுவான மிகக்கடினமான மறுசீரமைப்புகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி எரிபொருள், சமையல் எரிவாயு, மருந்து பொருட்களுக்கான வரிசைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மின் துண்டிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. நெருக்கடியிலிருந்து மீண்ட பொருளாதாரம், கடந்த ஆண்டு 5 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது - என்றார். (ஐ)

# வருடாந்தம் இதய நோயால் 60 ஆயிரம் பேர் உயிரிழப்பு!

## இளையோரே அதிகளவில் பாதிப்பு

கொழும்பு, ஏப். 10

இதய நோய் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் சுமார் 60 ஆயிரம் பேர் மரணமடைகின்றனர். இதில், மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் இதய செயலிழப்பு போன்ற நிலைமைகளும் அடங்கும் என்று இருதய நோய் நிபுணர் டாக்டர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் இதய நோய்கள் 15 வீதம் அதிகரித்துள்ளது. இதயம் தொடர்பான பிரச்னைகளுக்காக தினமும் 200 நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

மோசமான உணவு முறை, உடற்பயிற்சியின்மை, மன அழுத்தம் ஆகியவையே இதயம் தொடர்பான பிரச்னைகளுடன் தொடர்புடைய காரணிகள். இருப்பினும், ஆரம்ப கால தடுப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை தேர்வுகள் இதய நோய்கள் உருவாகும் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கும்.

குறிப்பாக, இளைஞர்களிடையே இதய நோய்கள் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் கவலை தெரிவித்தார். (ஐ)

# ஐ. எம். எவ்வின் இலங்கைக்கான செயல்திட்ட தலைவராக எவான்!

கொழும்பு, ஏப். 10

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) இலங்கைக்கான புதிய செயல்திட்ட தலைவராக எவான் பபஜோர்ஜியோ நியமிக்கப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு நாடு முகங்கொடுக்க நேர்ந்த தீவிர பொருளாதார நெருக்கடியை அடுத்து, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல்திட்டத்தின்கீழ் 290 கோடி டொலர் கடனை இலங்கைக்கு வழங்குவதற்கான முன்மொழிவுக்கு கடந்த 2023 மார்ச் 20 ஆம் திகதி நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்தது.

இந்த செயல்திட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் சார்பில் அதன் இலங்கைக்கான செயல்திட்ட தலைவர் பீற்றர் ப்ரூயர் தலைமை தாங்கினார்.

அவரின் பதவிக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இலங்கைக்கான புதிய செயல்திட்ட தலைவராக எவான் பபஜோர்ஜியா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பிரதித் தலைவராவார்.

இனி வரும் நாட்களில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல்திட்டத்தின்கீழ் இலங்கையில் முன்னெடுக்கப் பட்டு வரும் மறுசீரமைப்புகள் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எவான் பபஜோர்ஜியா தலைமை தாங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பேருந்து சேவை!

## இன்று முதல் ஆரம்பம் -

கொழும்பு, ஏப். 10

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை முதல் சுமார் 500 அரச பேருந்துகள் மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று இ. போ. சவின் பிரதி பொது முகாமையாளர் சந்திரசிறி தெரிவித்தார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்கு திரும்புவோரின் நன்மை கருதியே இந்த மேலதிக பேருந்து சேவை நடைபெறவுள்ளது.

முதல்கட்டமாக கொழும்பிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்புவோருக்காக (இன்று) வியாழக்கிழமை முதல் விசேட பேருந்து சேவை செயல்படுத்தப்படவுள்ளது. தற்போது சுமார் 500 அரச பேருந்துகள் மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

கொழும்பு மத்திய பேருந்து நிலையம் மாத்திரமல்லாது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 12 பிரதேச பேருந்து நிலையங்களிலும் இந்த சேவை நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன், 18 ஆம் திகதிக்கு பின்னர் சொந்த இடங்களிலிருந்து கொழும்பு நோக்கி பயணிப் பவர்களுக்காக பிரதான 12 பிரதேச பேருந்து நிலையங்களை உள்ளடக்கிய வகையில் மேலதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதேவேளை, தலதா கண்காட்சியை முன்னிட்டு 18 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை விசேட பேருந்து சேவை நடைமுறைப்படுத்தப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 10

மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற் றொருவரும் பாதிக்கப்பட்டுள் ளார்.

கண்டி - பன்விலவில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் 22 வயது இளைஞரே உயிரிழந் தார்.

கட்டுமாண பணியில் ஈடுபட்ட குறித்த இளைஞர், நேற்று முன்தினம் வீடு ஒன்றின் கட்டுமான பணியில் ஈடுபட் டுள்ளார். அப்போது, கம்பி ஒன்றை தூக்கியபோது அருகிலுள்ள உயர் மின்னழுத்த மின் கம்பியில் பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

அவரை காப்பாற்ற முயன்ற ஒருவரும் மின்சாரத்தால் தாக் குண்டு பாதிக்கப்பட்ட நிலை யில் தெல்தெனிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# சகல பாடசாலைகளுக்கும் நாளை முதல் விடுமுறை!

கொழும்பு, ஏப். 10

அரச, அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின இந்த ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி செயல்பாடுகள் நாளை வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது. இதற்கமைய முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் ஏப்ரல் 21ஆம் திகதி முதல் மே 9ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. மே 10 முதல் 13 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் தவணை மே 14ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஓகஸ்ட் 8 முதல் 17 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் ஓகஸ்ட் ஆகஸ்ட் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஒக்ரோபர் 18ஆம் திகதி முதல் நவம்பர் 16ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் நவம்பர் 17ஆம் திகதி முதல் டிசெம்பர் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கும் ஏப்ரல் 12 முதல் 20 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் ஏப்ரல் 21 முதல் மே 23 வரை இடம்பெறவுள்ளது.

மே 24 முதல் 27 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. இரண்டாம் தவணை மே 28 முதல் ஆகஸ்ட் 19ஆம் திகதி வரை இடம்பெற்றது. ஆகஸ்ட் 20 முதல் 24 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் ஓகஸ்ட் 25 முதல் ஒக்ரோபர் 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. நவம்பர் 1 முதல் 16 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் நவம்பர் 17 முதல் டிசெம்பர் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ஐ)

# தரம் 6இற்கு மாணவரை சேர்க்க ஏப். 30 வரை விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஏப். 10

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளியை விட அதிக புள்ளிகளை பெற்ற மாணவர்களை தரம் 6இல் இணைப்பதற்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஒன்லைன் முறை மூலமாக மட்டும் விண்ணப்பங்களை அனுப்புமாறு கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

http://g6application.moe.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் அதிகபட்சமாக மூன்று பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான றறற.moe.gov.lk இல் விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் உள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வாய்ப்பு கிட்டியுள்ளது!

## அமைச்சர் சுனில் ஹெந்துன்நெத்தி



கொழும்பு, ஏப். 10

**கடந்த காலங்களில் அரச சொத்துகளில் ஊழல், மோசடி செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த தற்போது அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதற்கு தேவையான சட்டமாகவே குற்றச்செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்ட திருத்தம் அமைகிறது. ஆனால், இந்த சட்டத்தை நாங்கள் ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யமாட்டோம் என்ற உறுதியை வழங்குகிறோம் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**

குற்றச்செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றுவதற்கும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்குமான ஒரு சட்டமாகவே இந்த சட்டம் அமைகிறது. எமது நாட்டில் மோசடிகளுக்கு எதிரான அதிகமான சட்டங்கள் இருக்கின்றன.

ஆனால், அரசியல்வாதிகளால் அந்த சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சட்டத்தை அவர்களுக்கு தேவையான முறையில் பயன்படுத்தி வந்தார்கள். அதனால், உரிமையாளர் இல்லாத பொருட்கள் வெளிப்பட்டன. அதனால், இந்த சட்டத்தை நாங்கள் ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யமாட்டோம் என்ற உறுதியை வழங்குகிறோம்.

இந்த சட்டம் மக்களுக்காகவும் மக்களின் அபிலாசைகளுக்காகவுமே பயன்படுத்தப்படும். யாரையும் பாதுகாக்கப் பயன்படுத்தப்படாது - என்றார். (ஐ)

# உகண்டா, டுபாயில் பதுக்கியுள்ள சொத்துகளை கொண்டு வாருங்கள்

## பெரமுன கட்சி ஆதரவளிக்க தயாராம்

கொழும்பு, ஏப். 10

உகண்டா, டுபாய் உள்ளிட்ட நாடுகளில் பதுக்கி வைத்துள்ள தாக குறிப்பிடப்படும் சொத்துகளை நாட்டுக்கு கொண்டு வாருங்கள்.

முழுமையான ஒத் துழைப்பு வழங்குகிறோம். இந்த நிதியை கொண்டு வந்து கடன்களை செலுத்துங்கள் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் டி. வி. சானக தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முறையற்ற சொத்துகள் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், முறையற்ற வகையில் சேர்க்கப்பட்ட சொத்துகளை அரசுடமையாக்கும் சட்டத்துக்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம். இயற்றப்படும் சட்டங்கள் சிறந்த விடயங்களுக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும். தவறானதாக பயன்படுத்தக் கூடாது.

ஆயுத சட்டம் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரானதாக பயன்படுத்தப்பட்டதை அனைவரும் நன்கறிவோம்.

இந்தச் சட்டத்தை இயற்றி நீங்கள் குறிப்பிட்டதைப் போன்று உகண்டா, டுபாய் உள்ளிட்ட நாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்களை நாட்டுக்கு கொண்டு வாருங்கள். முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறோம். இந்த நிதியை கொண்டுவந்து கடன்களை செலுத்துங்கள் - என்றார். (ஐ)

# பொருளாதார திட்டங்களில் அரசாங்கம் கவனமில்லை!

## எச்சரிக்கிறார் ராஜித

கொழும்பு, ஏப். 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு பொருளாதார திட்டங்களில் அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை. அது நாட்டுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்பதை அறியாமல் அதனை விமர்சிக்க முடியாது. எனவே, அரசாங்கம் அதனை நாட்டுக்கு வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் இந்தியாவுடன் இந்த அரசாங்கம் நட்புறவைப் பேணுவது பாராட்டுக் குரியது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டங்களையே இந்த அரசாங்கமும் முன்னெடுத்து வருகிறது. ஒப்பந்தங்கள் மாத்திரமின்றி சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டமும் எமது அரசாங்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அவற்றை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர இவர்களிடம் மாற்று திட்டம் எதுவும் இல்லை. அவற்றை பின்பற்றுவதால் எமக்கு எவ்வித சிக்கலும் இல்லை - என்றார். (ஐ)

# காட்டு யானைகள் தொல்லையால் வவுனியா மக்கள் பெரும் பாதிப்பு!

## சத்தியலிங்கம் எம். பி.

கொழும்பு, ஏப். 10

2010 - 2011 காலப்பகுதியில் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தின்போது சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு பதிலாக வழங்கப்பட்ட காணிகள் காட்டுப்பகுதியை அண்மித்துள்ளன. அந்த மக்கள் காட்டு யானைகள் தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உடன டியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.


பாராளுமன்றில் நேற்று முன்தினம் அவர் உரையாற்றிய போது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் வவுனியா நகரில் 2010 - 2011 இல் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது வயல் நிலங்கள், வீடுகள், வழிபாட்டிடங்கள் சுவீகரிக்கப்பட்டன. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 13 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இத்தனை வருடங்களாக உறுதிக் காணிகளை வழங்கியவர்கள் தற்காலிக அனுமதிப்பத்திரத்துடன் உள்ளனர்.

இந்த திட்டத்துக்காக கையளிக்கப்பட்ட காணிகள் யானைகள் இல்லாத காணிகளாக இருந்த நிலையில் இதற்கு பதிலாக வழங்கப்பட்டுள்ள காணிகள், நான்கு பக்கங்களில் இருந்தும் யானைகள் வந்து அழிவை ஏற்படுத்தக்கூடிய நிலைமை உள்ளது.

இதற்கு பதிலளித்த வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அருண கருணாதிலக, இந்த விவசாயிகளுக்காக தற்காலிகமான அனுமதிப் பத்திரங்களே வழங்கப்பட்டுள்ளன என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். உரித்துகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ஐ)

# தனியார் கல்வி நிலையங்கள் குறித்து கவனம் செலுத்துவோம்

## பிரதமர் ஹரிணி உறுதி



கொழும்பு, ஏப். 10

தனியார் கல்வி நிலையங்களை கண்காணிக்க கல்வி அமைச்சில் எவ்விதமான கொள்கைகளும் கிடையாது. ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் தனியார் வகுப்புகள் நடத்துவது பிரிவெனா உட்பட அறநெறி கல்வி முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக மதத் தலைவர்கள் முன்வைத்துள்ள விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தி உரிய தரப்பினருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம் என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மசிறி திஸநாயக்க, "தனியார் மேலதிக வகுப்புகளில் கல்வி நடவடிக்கைகளுக்கு செல்லும் மாணவர்கள் குறித்த ஆசிரியர்களால் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர் என்று ஊட கங்கள் தொடர்ச்சியாக செய்தி வெளியிடுகின்றன. ஒருசில தனி யார் கல்வி நிலைய ஆசிரியர்க ளின் கல்வி தகைமை குறித்தும் பிரச்னைகள் காணப்படுகின்றன. ஆகவே இந்த விடயங்களை கண்காணிப்பதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய, நாட்டில் சட்டம் உள்ளது. சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

மேலும், தர்மசிறி திஸநாயக்க, ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் பிரிவெனா உட்பட ஏனைய மதங்களின் அறநெறி கல்வி நடவடிக்கைகள் நடைபெறும். சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களை போன்று கனிஷ்ட பிரிவு வகுப்பு மாணவர்களும் ஞாயிற்றுக்கிழமை முழுநேர மேலதிக தனியார் வகுப்புகளுக்கு செல்கிறார்கள். இதனால் மதம் சார்ந்த கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இதனை கண்காணிப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் உள்ளதா என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், இந்த விடயம் தொடர்பில் சர்வமதத் தலைவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள். உரிய தரப்பினருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். வெகுவிரைவில் உரிய தீர்மானத்தை அறிவிப்போம் - என்றார். (ஐ)

# சட்டவிரோத சொத்துகள் அரசுடைமையாக்கப்படும்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 10

சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட சொத்துகள் மற்றும் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துகள் அரசுடமையாக்கப்படும். ஊழலுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

மேலும், சட்டவிரோதமான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துகளை அரசுடமையாக்குவதாக நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவோம். இதற்கான முதல் கட்டமாகவே முறையற்ற வகையில் சேர்க்கப்பட்ட சொத்துகளை அரசுடமையாக்குவது தொடர்பான சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தண்டனை சட்டக்கோவை, பொது சட்டம், ஊழல் சட்டம் ஆகிய சட்டங்களில் காணப்படும் குறைப்பாடுகள் இந்த சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் முறையற்ற வகையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துகள் இந்த புதிய சட்டத்தின் ஊடாக அரசுடமையாக்கப்படும்.

லஞ்சம் மற்றும் ஊழல் மோசடி முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். மோசடி செய்யப்பட்ட அரச சொத்துக்கள் மற்றும் அரச நிதி அரசுடமையாக்கப்பட வேண்டும் என்று மக்கள் கடந்த காலங்களில் அழுத்தமாக வலியுறுத்தினார்கள்.

மக்களின் அபிலாசைக்கு அமைவாகவே இந்த சட்டம் சர்வதேச கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது - என்று நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோது குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தல் பிள்ளையான் கைதுக்குக் காரணம்!

மட்டக்களப்பு, ஏப்.10

**கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார்.**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை கொழும்பு குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் மட்டக்களப்பில் உள்ள அவரது கட்சி காரியாலயத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதி துணைவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பயணித்த நிலையில் கொழும்பில் வைத்து அவர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சி. ஐ. டியினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில், பிள்ளையானை கைது செய்து கொழும்புக்கு கொண்டு சென்றனர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இரும்பு கடை முதலாளி கைது

மட்டக்களப்பு, ஏப். 09

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஆற்றங்கரை பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இரும்புக் கடை முதலாளி ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 44 வயதுடையவர் ஆவார்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி. லலித்த லீலாரத்தினவின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆற்றங்கரை பகுதியில் உள்ள பழைய இரும்பு விற்பனை நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது, 27 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இரும்புக் கடை முதலாளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதானவர், நீண்ட காலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# கிழக்கு ஆளுநரை சந்தித்த பயிற்சி பாதுகாப்புக் குழு!



திருகோணமலை, ஏப். 10

தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்ற பாதுகாப்பு அதிகாரிகள் குழுவிற்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும்.

இடையிலான விசேட சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாதுகாப்பு அதிகாரிகள் தங்களின் கற்கைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்துக்கு மேற்கொண்ட களப் பயணத்தின்போதே கிழக்கு மாகாண ஆளுநருடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் நிலவும் சமூக மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆளுநர் விளக்கமளித்ததுடன், மாகாணத்தில் நிலவும் பிரச்னைகள் மற்றும் பாதுகாப்புத் துறை எந்தளவுக்கு தலையிட வேண்டும் என்பது குறித்து விளக்கமளித்தார். (எ)

# இளம் குடும்பஸ்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

வாழைச்சேனை, ஏப்.10

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை மில்க் போர்ட் வீதியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வந்த 30 வயது இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது மரணத்துக்கான காரணத்தை கண்டறிய வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சம்மாந்துறையில் வீடற்றவர்களுக்கு வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்படும்

சம்மாந்துறை, ஏப். 10

வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று சம்மாந்துறைப் பிரதேசத்தில் வீடற்ற மக்களுக்கு வீடமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தி கொடுப்பதோடு, மாணவர்களுக்கு இலவசமாக பிரத்தியேக கல்வி, சுகாதார மேம்பாடு, சுயதொழில் ஊக்குவிப்பு மையம் போன்றவற்றை ஏற்படுத்தி பெரும் அபிவிருத்திப் பணிகளை இப்பிராந்தியத்தில் மேற்கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம் என நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவர் உதுமாண்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். வெளிநாடுகளின் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நமது மக்களுக்கு உதவி செய்வதற்கு தயாராக உள்ளன. அதுபோன்று பல்வேறு வெளிநாட்டு தனவந்தர்களும் முதலீட்டாளர்களும் எம்முடன் தொடர்பில் உள்ளனர். அவர்களும் நமது மக்களுக்கு உதவிகள் பலவற்றை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளனர்.

தற்கால சூழ்நிலையில் சம்மாந்துறைப் பிரதேசத்தில் தலைதூக்கி காணப்படும் போதைப் பொருள் பாவனைகளிலிருந்து இளைஞர் சமுதாயத்தை பாதுகாக்கும் விசேட வேலைத் திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல துறைசார்ந்த தரப்பினரோடு இணைந்து செயல்படவுள்ளோம். அதுபோன்று சுகாதாரம், திண்மக்கழிவு அகற்றல், வீதி அபிவிருத்தி, விவசாயிகள் பிரச்னை, தொழில்வாய்ப்புப் பிரச்னை போன்றனவற்றை நாம் இனங்கண்டிருக்கின்றோம். அவற்றை நிவர்த்தி செய்வதற்கு மக்களின் ஆணை எமக்குத் தேவையாக உள்ளது- என்றார்.

# 24000 பேருக்கு வட்டியில்லா கடனுதவி வழங்கிய சங்கம்

சம்மாந்துறை, ஏப். 10

சம்மாந்துறை அல் - மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம், 24 ஆயிரம் அங்கத்தவர்களுக்கு வட்டியில்லா கடனுதவியை வழங்கியிருப்பதாக அதன் தலைவர் ஐ.எம்.இப்றாஹிம் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை சம்மாந்துறை அல் - மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்துக்கு களக்கற்றல் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது, நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் ஆறு கிளைகள் ஊடாக வட்டியில்லா கடனுதவி சேவையை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இதுவரை 24 ஆயிரம் அங்கத்தவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. "வட்டி இல்லாத பொருளாதாரம் அருள் நிறைந்த எதிர்காலம்" எனும் திட்டத்தின் கீழ் இக்கடன் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என இப்றாஹிம் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கடன் சேவை மற்றும் டிஜிற்றல் நடவடிக்கைகளை ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிராமிய வங்கியினூடாக முன்னெடுப்பது தொடர்பான சாத்தியங்களை கண்டறிவதே இக்களக்கற்றல் பயணத்தின் நோக்கம் என அதன் தலைவர் நா. ஏரம்பமூர்த்தி தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 2024 ஆம் ஆண்டு கிராமிய வங்கியை ஆரம்பித்து இதுவரை சுமார் 100 அங்கத்தவர்களுக்கு 35 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளதோடு அதன் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (எ-09)

# சந்தை குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

கல்முனை, ஏப். 10

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர பொதுச் சந்தையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாநகர சபையின் வருமான பரிசோதகர் எம். எஸ். எம். உபைதுல்லாஹ், விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் நஸ்ரின் ஹாஜா, கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.பி. ஜமால்தீன், செயலாளர் ஏ.எல். கபீர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இதன்போது, சந்தையில் நில வும் குறைபாடுகள் தொடர்பிலும் அங்கு வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான சுமூகத் தீர்வுகள் எட்டப்பட்டன.

அத்துடன், சந்தையிலுள்ள கடைகளுக்கான வாடகை நிலுவைகளை அறவிடுதல், வாடகைக் கட்டணங்களை சீரமைப்பு செய்தல் உள்ளிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், கல்முனை மாநகர பொதுச் சந்தையினதும் வர்த்தகர்களினதும் நலன் கருதி கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வர்த்தகர் சங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கும் என்று சங்கப் பிரதிநிகள் இதன்போது உறுதியளித்தனர். (எ)

# தொழில்முனைவோரை மேம்படுத்தும் திட்டத்துக்கு ஜப்பான் அரசு ஆதரவு

மட்டக்களப்பு, ஏப். 10

"அமைதிக்கான பாதைகள் - இலங்கையில் பெண்கள் அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த தேசிய செயல்திட்டத்தை உணர்ந்துகொள்ளுதல்" என்ற திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 206 பெண் தொழில்முனைவோரை ஆதரித்து பொருள் உதவி வழங்குதல் மற் [illegible] நடைபெற்றது.


இந்தத் திட்டத்துக்கு ஜப்பான் அரசு ஆதரவளித்துள்ளதோடு இதற்காக 1. 7 மில்லியன் ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளது.

ஐ. நா. பெண்கள் மற்றும் ஜப்பான் அரசின் ஆதரவின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான அநுராதபுரம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலுள்ள பெண்கள் தலைமையிலான வணிகங்களை மேம்படுத்துவதில் கணிசமான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சி இதுவாகும்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் சுமார் 460 இற்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர், வணிகத் திட்டமிடல், நிதி, எழுத்தறிவு மற்றும் தயாரிப்பு பயிற்சிகள் மூலம் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை நிகழ்ச்சியில் அனர்த்தம் டொமினிக்கனில் 66 பேர் பலி!



சாண்டோ, ஏப். 10

**கரீபியன் தீவு நாடான டொமினிக்கன் தலைநகர் சாண்டோ டொமினிக்கோவில் இரவுநேர கேளிக்கை விடுதி சரிந்து விழுந்ததில் 66 பேர் உயிரிழந்தனர்.**

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த விடுதியில் நேற்று முன்தினம் இரவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் உட்பட பிரபலமானவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். 500 முதல் 1,000 பேர் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், இசை நிகழ்ச்சி நேற்று அதிகாலை வரை நீடித்துள்ளது. அப்போது, இசைநிகழ்ச்சி நடைபெற்ற கேளிக்கை விடுதியின் மேற்கூரை சரிந்து விழுந்தது. இந்தச் சம்பவத்தில் 66 பேர் உயிரிழந்தனர். மேலும், 160 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (எ)

# வரி விதிப்பை எதிர்கொள்ள இணைந்து செயல்படுவோம்

## இந்தியாவுக்கு சீனா அழைப்பு

பீஜிங், ஏப்.10

அமெரிக்க வரி விதிப்பை எதிர்கொள்ள இணைந்து செயல்படுவோம் என்று இந்தியாவுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

சீனா மீது ஒட்டுமொத்தமாக 104 சதவீத கூடுதல் வரியை அமெரிக்கா விதித்துள்ளது. இந்த நிலையிலேயே சீனா மேற் கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி, பரஸ்பர வரிவிதிப்பு என்ற பெயரில் இந்தியா, சீனா, உட்பட பல்வேறு நாடுகளுக்கு கூடுதலாக வரிவிதித்துள்ளார். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 27 சதவீத வரி விதித்துள்ளார். அதேபோன்று, சீனாவிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு ஏற்கனவே 54 சதவீதம் கூடுதல் வரியை ட்ரம்ப் விதித்தார். தற்போது, சீன இறக்குமதிக்குக் கூடுதலாக 50 சதவீத வரி விதித்துள்ளார். இதன் மூலம் சீனாவிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி 105 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால், உலகளவில் பெரும் வர்த்தகப்போர் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் நடவடிக்கைக்குப் பதிலடியாக சீனா 34 சதவீத கூடுதல் வரி விதித்துள்ளது.

இந்த நிலையில், சீனத் தூதரக செய்தித்தொடர்பாளர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சீனா - இந்தியா பொருளாதார, வர்த்தக உறவு இருதரப்பு நன்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அமெரிக்காவின் வரிவிதிப்பை எதிர்கொள்ளும் உலகின் 2 வளர்ச்சியடைந்த நாடுகள் இணைந்து செயல்பட்டு இந்த கடினமான சூழ்நிலையை கடக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (எ)

# கனமழை, வெள்ளத்தில் சிக்கி கொங்கோவில் 33 பேர் மரணம்

## 10 இலட்சம் மக்கள் பாதிப்பு

கின்ஷாசா, ஏப்.10

கொங்கோவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் அங்கு ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்தனர்.



மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசின் தலைநகர் கின்ஷாசாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக பல ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்த நாட்டில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். கின்ஷாசாவில் உள்ள 13 மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால், 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கனமழை, வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (எ)

# சூரிய மின்னுற்பத்தியில் இந்தியா முன்னேற்றம்

புதுடில்லி, ஏப்.10

காற்று, சூரிய மின் உற்பத்தியில் இந்தியா 3ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

பிரிட்டனை சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பான எம்பர், சுற்றுச்சூழலுக்கு மாசு இல்லாத எரி சக்தி உற்பத்தி குறித்து ஆண்டுதோறும் ஆய்வு நடத்தி விரிவான அறிக்கையை வெளியிட்டு வருகிறது. இதன்படி, எம்பர் அமைப்பின் ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

அதில், உலகம் முழுவதும் 215 நாடுகளின் மின் உற்பத்தி குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. இதன்படி கடந்த ஆண்டு சர்வதேச அளவிலான மின் உற்பத்தியில் 41 சதவீத மின்சாரம் அணு சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைகளில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இதன்படி சர்வதேச அளவில் நீர்மின் நிலையங்கள் மூலம் 14 சதவீதம், அணு சக்தி மூலம் 9 சதவீதம், காற்றாலைகள் மூலம் 8 சதவீதம், சூரிய மின் கட்டமைப்புகள் மூலம் 7 சதவீதம், இதர புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் 3 சதவீதம் மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அதிகளவில் மின்சாரத்தை பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தில் இருக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ரஷ்யா, ஜப்பான், பிரேசில் நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. சர்வதேச அளவிலான காற்று, சூரிய மின் உற்பத்தியில் சீனா முதலிடத்தில் இருக்கிறது. சீனாவின் மொத்த உற்பத்தியில் 82 சதவீத மின்சாரம், காற்றாலை, சூரிய மின் கட்டமைப்புகள், நீர் மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த நாட்டில் நிலக்கரி மூலம் 18சதவீதம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவின் சூரிய மின் உற்பத்தி, காற்றாலை மின் உற்பத்தி கடந்த 5 ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளது. சர்வதேச அளவிலான காற்று, சூரிய சக்தி மின் உற்பத்தியில் ஜேர்மனியை பின்னுக்குத் தள்ளி 3ஆம் இடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது. (எ)

# சிங்கப்பூர் பாடசாலையில் பயங்கர தீ விபத்து

சிங்கப்பூர், ஏப்.10

சிங்கப்பூர் பாடசாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 10 வயது சிறுமி உயிரிழந்தார்.

ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாணின் மகன் உட்பட 20 பேர் படுகாயமடைந்தனர்.

சிங்கப்பூர் புறநகர் பகுதியில் 3 மாடி கட்டடத்தில் பாடசாலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இதே கட்டடத்தில் திரையரங்கு வளாகமும் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் திடீரென இந்தக் கட்டடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. மளமளவென பரவிய தீ பாடசாலை கட்டடம் உட்பட அனைத்து பகுதிகளுக்கும் பரவியது.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீ மேலும் பரவாமல் அணைத்தனர். கட்டடத்திலிருந்து சிக்கிய 80 பேர் ... (எ)

## 24 மணி நேர கெடு முடிந்தது

# சீனாவின் மீது 104 சதவீதம் வரி விதித்தது அமெரிக்கா

வாஷிங்டன், ஏப். 10

அமெரிக்கப் பொருட்கள் மீது விதித்த 34 சதவீத பதிலடி வரியை திரும்பப் பெற சீனாவுக்கு விதித்த 24 மணி நேர கெடு முடிந்த நிலையில், சீனா மீது 104 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சீனா தனது 34 சதவீத வரி அதிகரிப்பை திரும்பப் பெறவில்லை என்றால், மறுநாள் அதாவது, நேற்று (ஏப்ரல் 9ஆம் திகதி) முதல் சீனா மீது 50 சதவீதம் கூடுதல் வரிகளை அமெரிக்கா விதிக்கும். சீனாவுடனான அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறுத்தப்படும். பிற நாடுகளுடனான பேச்சுகள் உடனடியாக நடைபெறும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில் 24 மணி நேர கெடு முடிந்தும் அமெரிக்கா மீதான 34 சதவீத வரிவிதிப்பை சீனா திரும்பப்பெறவில்லை. இதனையடுத்து சீனா மீது 104 சதவீத வரி விதிக்கப்படுவதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இந்த வரி விதிப்பு நேற்றுப் புதன்கிழமை முதல் அமுலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ட்ரம்ப் வர்த்தக போரை தொடர்ந்தால் இறுதிவரை எதிர்த்து போராடுவோம்

## சீனா திட்டவட்டமாக அறிவிப்பு

பீஜிங், ஏப். 10

அமெரிக்கா தவறுக்கு மேல் தவறு செய்கிறது என்று சீனா தெரிவித்துள்ளது.

ட்ரம்ப் வர்த்தக போரை தொடர்ந்தால் இறுதிவரை எதிர்த்து போராடுவோம் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீனா மீது கூடுதலாக 50 சதவீதம் வரியை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார். சீனா விதித்த 34 சதவீதம் பதிலடி வரியை திரும்பப் பெறாவிட்டால், கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், அமெரிக்க நிலைப்பாட்டுக்கு சீனா பதிலளித்துள்ளது. இது தொடர்பில் சீன வர்த்தக அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "சீனாவுக்கு எதிராக கூடுதலாக வரி விதிப்பதாக அமெரிக்கா மிரட்டல் விடுப்பதன் மூலம், அமெரிக்கா தவறுக்கு மேல் தவறு செய்கிறது. அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தை சீனா ஏற்றுக்கொள்ளாது. ட்ரம்ப் வர்த்தக போரை தொடர்ந்தால், சீனா இறுதிவரை எதிர்த்து போராடும். தனது நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்க சீனா பதிலடி நடவடிக்கைகளை எடுக்கும்" என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையை வீழ்த்தி பஞ்சாப் அணி வெற்றி

முல்லான்பூர், ஏப்.10


சென்னை அணிக்கு எதிரான போட்டியில் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்தியாவின் முல்லான்பூரில் நடைபெற்ற இந்த போட்டியில் பிரியன்ஷ் ஆர்யா ஆட்டத்தின் முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்து அதிரடியாக தொடங்கினார். ஆனால், சென்னை பந்துவீச்சாளர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்களை கைப்பற்றினர். பஞ்சாப் அணியின் முன்னணி வீரர்களான பிரம்சிம்ரன் சிங் ஓட்டம் எதுவுமின்றியும், ஸ்ரேயஸ் ஐயர் 9 ஓட்டங்களிலும், மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 4 ஓட்டங்களிலும், வதேரா 9 ஓட்டங்களிலும், மக்ஸ்வெல் ஓர் ஓட்டத்திலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

இருப்பினும் விக்கெட் விழுவதை நினைத்து கவலைப்படாத பிரியன்ஷ் ஆர்யா சென்னை பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். ஷசாங்க் சிங் அவருக்கு ஓரளவு ஒத்துழைப்பு கொடுத்தார். வெறும் 39 பந்துகளில் சதமடித்து அசத்தினார் பிரியன்ஷ் ஆர்யா. 42 பந்துகளை எதிர்கொண்ட அவர் 103 ஓட்டங்கள் (9 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகள்) குவித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதி கட்டத்தில் ஷசாங்க் சிங் - மார்கோ ஜான்சன் இணை அதிரடியாக விளையாட பஞ்சாப் 200 ஓட்டங்களை கடந்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பஞ்சாப் அணி 6 விக்கெட்களை இழந்து 219 ஓட்டங்கள் குவித்தது. ஷசாங்க் சிங் 52 ஓட்டங்களுடனும், மார்கோ ஜான்சன் 34 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். சென்னை தரப்பில் அஸ்வின் மற்றும் கலீல் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து 220 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணியின் சார்பில் ரச்சின் ரவீந்திரா மற்றும் டெவான் கொன்வே ஆகியோர் களமிறங்கினர். அதிரடியாக தொடங்கிய இந்த ஜோடியில் ரச்சின் ரவீந்திரா 36 (23) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய கெய்க்வாட் ஓர் ஓட்டத்தில் வெளியேறினார்.



அடுத்ததாக கொன்வேயுடன், சிவம் துபே ஜோடி சேர்ந்தார். சீரான வேகத்தில் ஓட்டங்கள் குவித்த இந்த ஜோடியால் அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிரடியாக உயர்ந்தது. கொன்வே 37 பந்துகளில் தனது அரைச் சதத்தை பதிவு செய்து அசத்தினார்.

மறுமுனையில் அதிரடி காட்டி வந்த சிவம் துபே 42 (27) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக கொன்வேயுடன், எம். எஸ். டோனி ஜோடி சேர்ந்தார்.

கடைசி ஓவரில் சென்னை அணியின் வெற்றிக்கு 28 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், முதல் பந்திலே எம்.எஸ். டோனி 27 (12) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் விஜய் சங்கர் 2 ஓட்டங்களும், ஜடேஜா 9 ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்த நிலையில், சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 201 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பஞ்சாப் அணியின் சார்பில் பர்குசன் 2 விக்கெட்களும், மக்ஸ்வெல் மற்றும் யாஸ் தாக்கூர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதன்மூலம் சென்னை அணிக்கு எதிரான போட்டியில் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றிபெற்றது.

(எ)

# சிறந்த ஆட்டத்தை விளையாடவில்லை

## ஸ்ரேயஸ் ஐயர் தெரிவிப்பு

முல்லன்பூர், ஏப். 10

நாங்கள் இன்னும் எங்கள் சிறந்த ஆட்டத்தை விளையாடவில்லை என்று ஸ்ரேயஸ் ஐயர் தெரிவித்தார்.


ஐ. பி. எல். தொடரில் முல்லன்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 22ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 219 ஓட்டங்கள் குவித்தது.

சென்னை 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழந்து 201 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் வெற்றி பெற்றது. சென்னை தரப்பில் அதிகபட்சமாக டெவான் கொன்வே 69 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த நிலையில், வெற்றி பெற்ற பின்னர் பஞ்சாப் அணியின் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் கூறுகையில், எந்த கிரிக்கெட் மைதானத்தில் விளையாடினாலும் இது தான் எங்கள் ஆட்டமாக இருக்கும். பிரியன்ஷ் ஆர்யா விளையாடிய முறை அபாரமாக இருந்தது.

கடந்த போட்டியில் ஜோப்ரா ஆர்ச்சரை எதிர்கொண்ட போது முடிவு எடுப்பதில் கொஞ்சம் தடுமாறிய அவரிடம் நான் பேசினேன். அதை வைத்து தனது உள்ளுணர்வுகளை பின்பற்றி சுதந்திரமாக விளையாடிய அவரைப் போன்ற மனநிலையை எங்கள் வீரர்கள் அனைவரும் கொண்டிருக்க விரும்புகிறேன்.

எங்களுடைய சிறந்த ஆட்டத்தை இன்னும் நாங்கள் ஆரம்பிக்கவே இல்லை. இது தொடரின் தொடக்கம் என்பதால் கொஞ்சம் பதற்றம் இருக்கிறது. அதை விட்டு விட்டு பயமின்றி நாங்கள் விளையாட வேண்டும். அதையும் தாண்டி இந்தப் போட்டியை வென்றது முக்கியம்- என்றார். (எ)



# 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ போராடி வெற்றி!

கொல்கத்தா, ஏப். 10

4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி போராடி வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் விளையாடின. கொல்கத்தா ஈடன் கார்டனில் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 238 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக நிக்கோலஸ் பூரன் 87 ஓட்டங்களும், மிட்செல் மார்ஷ் 81 ஓட்டங்களும் அடித்தனர். கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராணா 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 239 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 24 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரின் முதல் 3 பந்துகளை எதிர்கொண்ட ஹர்ஷித் ராணா 5 ஓட்டங்கள் அடித்தார். அடுத்த 3 பந்துகளை எதிர்கொண்ட ரிங்கு சிங் 2 பௌண்ட்ரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் உட்பட 14 ஓட்டங்கள் மட்டுமே அடித்தார். கடைசி வரை போராடிய ரிங்கு சிங்கின் போராட்டம் வீணானது.

20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய கொல்கத்தா அணியால் 7 விக்கெட்களை இழந்து 234 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் லக்னோ 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரிங்கு சிங் 38 ஓட்டங்களுடன் (15 பந்துகள்) களத்தில் இருந்தார். லக்னோ தரப்பில் ஷர்துல் தாகூர் மற்றும் ஆகாஷ் தீப் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

# நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் விலகல்

வெலிங்டன், ஏப். 10

நியூசிலாந்து அணியின் மூன்று வடிவிலான போட்டிக்கும் தலைமை பயிற்சியாளராக கேரி ஸ்டீட் 2018ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வந்தார். இந்த நிலையில் அவர் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.


கேரி ஸ்டீட்டின் பயிற்சியின் கீழ் நியூசிலாந்து அணி 2019ஆம் ஆண்டு 50 ஓவர்கள் உலகக் கிண்ணம், 2022ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணம் மற்றும் இந்த ஆண்டில் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களில் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தது.

அதேசமயம் 2021ஆம் ஆண்டு முதலாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது. இந்த நிலையில், வெள்ளைநிற பந்து போட்டிக்கான (ஒரு நாள் மற்றும் 20 ஓவர்கள்) பயிற்சியாளர் பணியிலிருந்து மட்டும் விலகுவதாக ஸ்டீட் அறிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிக்கான பயிற்சியாளர் பதவிக்கு மீண்டும் விண்ணப்பிப்பது குறித்து இன்னும் சில வாரங்களில் முடிவு செய்வேன் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், மூன்று வடிவிலான போட்டிக்கும் வெவ்வேறு பயிற்சியாளரை நியமிப்பது குறித்து நியூசிலாந்து இன்னும் முடிவு செய்யவில்லை.

(எ)

# ஆர்.சி.பி. அணி தலைவர் பட்டிதாருக்கு அபராதம்




மும்பை, ஏப். 10

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் தலைவர் ரஜத் பட்டிதாருக்கு இலங்கை மதிப்பில் 41 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். ரி- 20 கிரிக்கெட் தொடரில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணி வீழ்த்தியது.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் பந்து வீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டதாக ஆர்.சி.பி. அணியின் தலைவர் ரஜத் பட்டிதாருக்கு 41 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# தோல்விக்கு என்ன காரணம்? சி. எஸ். கே. அணி விளக்கம்

முல்லன்பூர், ஏப். 10

சென்னை அணி கடைசியாக விளையாடிய 4 ஆட்டங்களிலும் தோல்வி கண்டுள்ளது.

முல்லன்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்திலும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இந்த நிலையில், சி.எஸ்.கே. தலைமை பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் கூறுகையில்,

இந்த போட்டியை பொறுத்தவரை களத்தடுப்பில் நாங்கள் பெரும் தவறுகள் செய்தோம். சில நேரங்களில் அழுத்தத்தின் கீழ் எப்படி செயல்பட வேண்டும் என்கிற துல்லியம் இல்லை. பஞ்சாப் வீரர் பிரியன்ஷ் ஆர்யாவின் சிறப்பான இன்னிங்ஸால் நாங்கள் அழுத்தத்துக்கு உள்ளானோம். அவரைக் கட்டுப்படுத்த நாங்கள் சிறப்பாக செயல்பட்டிருக்க வேண்டும்.

அங்குதான் ஆட்டம் எங்களிடமிருந்து விலகிச் சென்றது. நீங்கள் ஐ.பி.எல் தொடரை வெல்ல வேண்டுமானால் பெரும்பாலான ஓட்டங்களை பெறுவதற்கு முதல் மூன்று வீரர்கள் கட்டாயம் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியம். நாங்கள் அதைச் செய்யவில்லை.

இருப்பினும் இந்த போட்டியில் ஓரளவு நன்றாக செயல்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. போட்டியின் நடுவில் எங்களால் அதே வேகத்தில் விளையாட முடியவில்லை. காரணம் எதிரணியின் சிறப்பான பந்துவீச்சாக கூட இருந்திருக்கலாம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பொருட்களின் ஏற்று மதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் இது குறித்து கலந்துரையாட சர்வக்கட்சி கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை ஜனாதிபதி தலைமையில் இந்த சர்வகட்சி கூட்டம் நடைபெற உள்ளதுடன், எதிர்க்கட்சிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளன.

12 எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## அமெரிக்க...

ஆலோசனையின் பேரில் ட்ரம்ப் நிர்வாகத்தின்போது இந்த வரி விதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பர்களில் எலோன் மஸ்க் ஒருவர் என்றும், அந்த வலுவான நட்பைப் பயன்படுத்தி இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு நிவாரணம் வழங்க பேச்சு நடத்தியிருக்கலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இல்லாததால் இலங்கை அந்த வாய்ப்பை இழந்துள்ளதாகவும் ராஜித வலியுறுத்தினார்.

ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்திருந்தால், 44 வீத வரியை முழுமையாக நீக்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் 24 வீதமாக குறைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார். (அ)

## சிறுவர்...

மந்தபோசனை அதிகரித்துவருவதை யும், போதியளவு போசனையைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் இடைவெளியையும் காண்பிப்பதாக உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்களில் ஒன்றான உலக உணவுத்திட்டத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் நிலைவரம் தொடர்பான அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் போசனை மட்டம் தொடர்பில் அவ்வறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

பொருளாதார நெருக்கடி மற்றும் காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்ந்த போதிலும், கடந்த ஆண்டு இலங்கை ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சியை நோக்கிய பாதையில் பயணித்தது. குறிப்பாக கட்டமைப்பு மற்றும் கொள்கை ரீதியான மறுசீரமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து, 2024 இன் முதலாம் காலாண்டில் பொருளாதாரம் 5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

பொருளாதார மீட்சிக்கான அறிகுறிகள் தென்பட்டபோதிலும், வறுமை, மக்களின் நலிவுற்றதன்மை, உணவுப் பாதுகாப்பின்மை போன்ற நிலைமைகள் தொடர்ந்தன. நாட்டின் மொத்த சனத்தொகையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை 31 வீதமாகப் பதிவானது.

உலக வங்கியின் எதிர்வு கூறலின்படி அடுத்துவரும் சில ஆண்டுகளுக்கு நாட்டின் வறுமை மட்டம் 25 வீதத்துக்கும் மேல் தொடரும் என எதிர்பார்கக்கப்படுகிறது. அதேபோன்று 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் வயதுக்கு ஏற்ற எடை மற்றும் உயரம் இன்மை என்பன உள்ளடங்கலாக மந்தபோசணை யினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்க ளின் எண்ணிக்கை கடந்த 5 வருடங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது.- என்றுள்ளது. (அ)

## அமெரிக்க...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டிய கதையாக அரசாங்கத்தின் செயற்பாடு இருக்கிறது. அமெரிக்காவின் வரி விதிப்பினால் ஏராளமான பாதிப்புகள் ஏற்படப் போகின்றன. அதற்கு மேலதிகமாக மேலும் மேலும் சுமையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அரசாங்கத்துக்கு கிடைத்த அழுத்தங்களின் காரணமாக அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். அமெரிக்காவின் வரி விதிப்பு என்பது பொருளாதாரம் சார்ந்தது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்வது என்பது நாட்டின் நல்லாட்சியும் மனித உரிமை பேணலையும் பொருத்தது.

இவை இரண்டையும் குழப்பிக் கொள்ள வேண்டாம். ஜெனீவாவில் ஆங்கிலத்தில் ஒரு விடயத்தையும் பாராளுமன்றத்தில் அதற்கு மாறாக சிங்களத்தில் ஒரு விடயத்தையும் கூறுவதால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் - என்றார். (அ)

## மாகாண...

நடத்துவதன் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை உறுதி செய்வதிலும் முழுமையாகக் கவனம் செலுத்தியதாகப் பிரதமர் கூறினார்.

புதிய அரசாங்கம் தற்போது பொருளா தாரத்தை உறுதிப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த ஆறு மாதங்களில் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றுள்ளதாகவும், அடுத்த மாதம் மற்றொரு தேர்தல் நடைபெறவுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலும் பல ஆண்டுகளுக்கு மேல் நடைபெறாமல் உள்ளது. மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றவுடன், புதிய அரசியல மைப்பை உருவாக்கும் செயல்முறையை அரசாங்கம் ஆரம்பிக்கும்.

தற்போதைய அரசாங்கம் இந்த ஆண்டு பாதீட்டுத் திட்டத்தில் புதிய யாப்பு உருவாக்கச் செயல்முறைக்கு நிதி ஒதுக்க வில்லை.

எவ்வாறாயினும், முந்தைய அரசாங்கத் தால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட அரசியல மைப்பு வரைவு செயல்முறையை தற்போ தைய அரசாங்கம் பொதுமக்களின் ஆலோசனைகள் மூலம் தொடர விரும்புவதாகவும் பிரதமர் கூறினார். (அ)

## வடக்கு...

விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரதப் பிரதமர் கடந்த வாரம் இலங்கைக்கு வருகைத் தந்திருந்தார். இதன்போது பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த விடயம் சீனாவுக்கு வலிக்கும் என்றும்,அமெரிக்காவுக்கு வலிக்கும் என்றும் இங்கே பலர் கதைக்கின்றனர். ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் இலங்கையை மேலே கொண்டு வருவதற்கான முயற்சியை முதலில் செய்தது இந்தியாவே. இதுவே பக்கத்து நாடு. இந்த ஒப்பந்தங்கள் சரியானவை என்றே கூற வேண்டும்.

இந்நிலையில் சீனாவின் அனுசரணையில், சீனாவின் அடிவருடிகள் இந்த விடயத்தில் குழப்ப நினைத்தால் நாங்கள் நிச்சயமாக அதனை எதிர்த்து நிற்போம். அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்கில் சீனாவின் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு அனுமதிக்க முடியாது என்பதையும் கூறிக்கொள்கின்றேன் -என்றார். (அ)

## நிபந்தனைகளை...

காட்டினார்.

பாத்பைன்டர் நிறுவனத்தினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத் தூதுவருட னான வட்டமேசை கலந்துரையா டலிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றி யம் வழங்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை அடுத்த வருடம் இறுதியுடன் நிறைவடைகிறது. மீண்டும் அதனை பெற்றுக்கொள்ள இலங்கை அதற்கு மீள விண்ணப்பிக்கவேண்டும்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியம் 2027ஆம் ஆண்டிலிருந்து புதிய நிபந்தனைகளையும் விதிக்கவிருக்கிறது.

சில தினங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு இலங்கைக்கு விஜயம் செய்து 27 நிபந்தனைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின் றன என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கவிருக்கிறது. அந்த கண்காணிப்பின் பின்னரே இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை மீண்டும் வழங்குவதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படவிருக்கிறது.

அமெரிக்கா இலங்கைக்கு 44 வீத தீர்வையை விதித்திருக்கின்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த ஜி.எஸ். பி. பிளஸ் வரி சலுகையும் முடிவுக்கு வருமானால் இலங்கையை பாரிய நெருக்கடியை சந்திக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறார்.

“அரசாங்கம் உரையாடலைத் தொடங்க வேண்டும், தகவல்களை வழங்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இன்னும் எதையும் செய்யவில்லை என்றால், ஏன்? என்ன தடைகள் உள்ளன என்பதனை கூறுங் கள். அதைச் செய்வதற்கான வழிமுறை என்ன? இந்த வகையான ஈடுபாட் டைத்தான் கேட்கிறோம். அனைத்து விடயங்களும் இன்று தீர்க்கப்பட வேண்டும் என்று நாம் கூறவில்லை. நிபந்தனைகள் சர்வதேச மரபுகளுக்கு இணங்கும் வகையில் உள்ளன. இப்போது 27 நிபந்தனைகள் உள்ளன. இன்னும் பல உள்ளீர்க்கப்படும்” என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கிட்டத்தட்ட 2.5 பில்லியன் டொலர்களுக்கு ஏற்றுமதி செய்கிறது. அதிகளவில் ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் ஜி.எஸ்.பி வரிச் சலுகையினால் இலங்கை 66 வீத நிவாரணத்தை இலங்கை பெறுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் 27 நாடுகளைக் கொண்ட 450 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஒற்றை சந்தையாக காணப்படுகிறது. இந்த 27 நாடுகளுக்கும் ஓர் எல்லையின் ஊடாக பிரவேசிக்க முடியும்.

“ஐரோப்பிய ஒன்றியம் இலங் கைக்கு வழங்கியிருக்கின்ற ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதனை முழுமையாக பயன்படுத்தினால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியை இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும். இலங்கை தற் போது பிரான்ஸ், ஜேர்மன், ஸ்பெய்ன், பெல்ஜியம் போன்ற சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. 27 நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். 27 நாடுகளும் ஒரு சந்தையாகும்” என்றும் தூதுவர் குறிப்பிட்டார். (அ)

## தேசிய...

ஸ்தாபிக்கப்பட்டது.

தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்திற்கு அமைய மாவட்ட செயலகங்களில் உள்விவகார பிரிவுகளை ஆரம்பித்தல் எனும் கருப்பொருளுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. (அ)

## பயங்கரவாத...

இராசமாணிக்கம் சாணிக்கியன் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏதேனும் முக்கியமான ஆதாரங்கள் எமது அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்படுமானால் அவை குறித்து விசாரணை நடத்தப்படும்.

நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறு மாதங்களே ஆகின்றன. யுத்தம் இடம்பெற்று 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அது குறித்து விசாரணை செய்வதாக உறுதியளித்தே கடந்த அரசாங்கங்கள் ஆட்சியமைத்தன.

நமது ஆட்சியில் மிகக் குறுகிய காலத்தில் ஆதாரங்களை தேடுவது என்பது சிக்கலானதாகும்.

ஆனபோதும் ஆதாரங்களை திரட்டுவதில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். தற்போது உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் மற்றும் ஒருசில ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேவேளை, எமது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் உள்ளக ரீதியான விசாரணை நடத்தப்படுகிறது. இது உணர்வு பூர்வமான விடயமாகும். ஆதலால் நாம் மிக அவதானத்துடன் இதனை நோக்குகிறோம். காணாமல் போனோருக்கான அலுவலகம் ஊடாகவும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் அதிகாரம் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

அரசியல் கைதிகள் தொடர்பில் தகவல் இருக்குமாயின் அவற்றை தரும் பட்சத்தில் அவை தொடர்பில் ஆராய்ந்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நாம் உறுதியளித்துள ளோம். அது தொடர்பில் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு நீதி அமைச்சரினால் அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பரிந்துரை அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் நாம் அந்தக் குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

அதேபோல் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு புதிய சட்டத்தை கொண்டுவருவதற்கும் பரிந்துரைகளை வழங்குமாறு கோரியுள்ளோம்.

இந்த விடயங்களை எமது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ளோம். ஆதலால் இதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

மேலும், கடந்த காலங்களில் அரசியல் ரீதியான உந்துதலுடன் காணி அபகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறோம். அந்தப் பகுதிகளில் இன ரீதியான அடிப்படையில் காணிகளை நாம் வழங்க மாட்டோம்.

அதேபோல் படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை கடந்த அரசாங்கங்களும் விடுவித்திருந்தன.

படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் சிலவற்றை நாம் அடையாளம் கண்டுள்ளோம். அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வாறு விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பிலான விரிவான அறிக்கையை நான் சபைக்கு ஆற்றுப்படுத்துகிறேன். - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவர் கைது!

கொழும்பு, ஏப். 10

கதிர்காமம் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவருமான அசோக விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்காக மாணிக்க கங்கைக்கு அருகிலுள்ள இடம் ஒன் றில் கட்டுமான பணிக்கு ஆவணங்களை தயாரித்தல் தொடர்பில் அசோக விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியா மாறிவிட்டது

## ஜே. வி. பி. பொது செயலர்


கொழும்பு, ஏப். 10

**நாங்கள் கடந்த காலங்களில் இந்தியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோம். இந்தியா தற்போது மாறிவிட்டது, உலகமும் மாறிவிட்டது - இவ்வாறு கூறியுள்ளார் ஜே. வி. பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா.**

அத்துடன், இலங்கைக்கு பாதகம் ஏற்படுத்தும் விதத்தில் ஏதாவது உடன்படிக்கையில் அரசாங்கம் கைசாத்திட்டுள்ளதா என்பதை எதிர்கட்சிகள் நிரூபிக்கவேண்டும் என்றும் இதன்போது சவால் விடுத்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை உடனடியாக பொதுமக்களுக்கு அரசாங்கம் பகிரங்கப்படுத்தியுள்ளது. இந்த உடன்படிக்கைகள் இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கக்கூடியவை.

கடந்த காலங்களில் இந்தியாவின் பல திட்டங்களுக்கு ஜே. வி. பி. எதிர்ப்பு வெளியிட்டதை ஏற்றுக் கொண்டுள்ள அவர் இந்திய இராணுவம் இலங்கைக்கு வருவதற்கு காரணமான இந்திய - இலங்கை ஒப்பந்தம் நாட்டுக்கு இழைக்கப்பட்ட துரோகம் என்பதால் அதற்கு எதிராக ஜே. வி. பி. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது என தெரிவித்துள்ளார்.



நாங்கள் கடந்த காலங்களில் இந்தியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோம்.

இந்தியா தற்போது மாறிவிட்டது - உலகமும் மாறிவிட்டது . 1987 இல் நாங்கள் எதிர்த்ததால் அந்த கோபத்தை கைவிடாமல் தொடர்ந்தும் அதே மனோநிலையில் இருக்கவேண் டுமா ? என்றும் கேள்வி எழுப் பியுள்ளார். (ஐ)

## சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் விசாரணைகள் துரிதப்படுத்தப்படும்

### சிறுவர், மகளர் விவகார அமைச்சு

கொழும்பு, ஏப். 10

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளின் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான திட்டத்தை தயாரிப்பதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் சுமார் 40 ஆயிரம் வழக்குகள் நிலுவையில் உள்ளமை வெளிக்கொணரப்பட்டுள்ளது. அத்துடன், பல ஆண்டுகளாக சில வழக்குகளுக்கான தீர்ப்பு வழங்கப்படும் செயல்பாடுகள் தாமதமாகி வருவதால் சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சுடன் பல கட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது உடனடியாக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதை விரைவுபடுத்த சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உதவியைப் பெறுவதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

### வவுனியாவில் நேற்று துயரம்

வவுனியா, ஏப். 10

முச்சக்கர வண்டியை காற்றமுத்த இயந்திரத்தால் சுத்திகரிப்பு செய்தவர் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

வவுனியா - ஓமந்தை - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் நேற்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 50 வயது நபரே உயிரிழந்தார்.சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தேர்தல் தொடர்பில் 944 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 10

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைகள் தேர்தல் தொடர்பில் 944 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 06 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 891 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 47 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி வள்ளங்கள் தீக்கிரை

முல்லைத்தீவு, ஏப்.10

முல்லைத்தீவில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட 20 வள்ளங்கள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தீக்கிரையாக்கப்பட்டன.

முல்லைத்தீவு நந்திக்கடல் களப்புப் பகுதியில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக மீனவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்த குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து சில மாதங்களாக கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினர் மற்றும் மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், விசேட அதிரடிப்ப டையினர், கடற்படையினர் என அனைத்துத் தரப்பினரும் இணைந்து பல்வேறு சுற்றிவளைப்புகளையும் சட்டவிரோத தொழில் நடவடிக் கைகளை கட்டுப்படுத்த கைது நடவடிக்கை களையும் மேற்கொண்டனர்.

இந்த வகை யில் தொடர்ச்சியாக மேற் கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பு மற்றும் கைது நடவடிக்கைகளில் சட்டவிரோத தொழில் நடவடிக் கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு நிர்மாண விதிகளுக்கு முரணாக தயாரிக்கப்பட்ட வெட்டு வள்ளங்கள் எனப்படுகின்ற 20 வள்ளங்கள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நந்திக்கடல் களப்பை அண்மித்த பகுதியில் எரியூட்டப்பட்டன.

கடந்த 03ஆம் திகதி கைப்பற்றப்பட்ட எட்டு வள்ளங்களும் 02 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட ஏழு வள்ளங்களும் 2 ஆம் மாதம் 28 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட மூன்று வள்ளங்களும் 2 ஆம் மாதம் 25 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட இரண்டு



வள்ளங்களுமாக 20 வள்ளங்கள் எரியூட்டப்பட்டன.

இதேவேளை, நந்திக்கடல் களப்பு பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் மீனவர்களை சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது சட்டபூர்வமாக மீன்பிடி நடவடிக் கைகளை மேற்கொண்டு தனது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கு மாறும் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

## முன்னாள் அமைச்சர் கெஹலிய சி. ஐ. டியில் வாக்குமூலம் அளிப்பு



கொழும்பு, ஏப். 10

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றைய தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கெஹலிய ரம்புக்வெல்ல, தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 7 மாதங்கள் கடந்த நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாத சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஆராய குழு!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஏப். 10

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஆராய விசேட குழுவை நியமிக்க அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்துள் ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது குறித்தும் புதிய சட்டத்தை உரு வாக்குவது குறித்தும் அரசாங்கம் விரிவான ஆலோசனை நடத்தும் என பதில் அளித்திருந்தார்.பயங் கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளும், சிவில் அமைப்புகளும் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையும் சுட்டிக்காட் டத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.